செய்தி வெளியீடு எண்: 235 நாள்: 10.03.2019

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (10.3.2019) தலைமைச் செயலகத்தில், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 666 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளுக்கும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 197 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 1978–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இவ்வாரியமானது சென்னைப் பெருநகர் பகுதியின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைக்கேற்ப பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் சேவைகளை செய்து வருகின்றது. மேலும், தற்போதுள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், எதிர்காலத் தேவைக்கேற்ப உட்கட்டமைப்புகளை திட்டமிட்டு உருவாக்குதல், இயக்குதல் மற்றும் தொலைநோக்கு பார்வையோடு திட்டங்களை நடைமுறைபடுத்துதல் போன்ற பணிகளை வாரியம் ஆற்றி வருகின்றது.

அந்த வகையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம் மற்றும் காரம்பாக்கத்தில் 241 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்; நெற்குன்றத்தில் 100 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாதாள சாக்கடைத் திட்டம்; முகலிவாக்கத்தில் 77 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாதாள சாக்கடைத் திட்டம்;

வளசரவாக்கம் பகுதியில் சீரான குடிநீர் விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையில் 69 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள்; ஆலந்தூர் பகுதியில் உள்ள நிலமங்கை நகரில் உள்ள கழிவுநீர் உந்து நிலையத்தை 25 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி;

வடிவமைப்பு மற்றும் கட்டுமான அடிப்படையில் 152 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ரெட்டை ஏரி, பெரும்பாக்கம் மற்றும் அயனம்பாக்கம் ஏரிகளில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் பணி, நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடி பகுதிகளில் மறுசுழற்சி சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து அங்கிருந்து போரூர் மற்றும் பெருங்குடி ஏரிகளில் கொண்டு செலுத்துவதற்கான குழாய் பதிக்கும் பணி, எருமையூரில் உள்ள

பயன்பாடற்ற கல்குவாரிகளில் தேங்கியுள்ள நீரை செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டும் செல்வதற்கான சிறப்பு நீர்உந்தும் கட்டுமானம் மற்றும் குழாய்கள் பதிக்கும் பணிகள்;

என மொத்தம் 666 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப்பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தில், 4 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேவேரிப்பள்ளி மற்றும் 23 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம்;

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில், 11 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 38 ஊரகக் குடியிருப்புகளுக்கான நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீரைக்கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்; வேடசந்தூர் ஒன்றியத்தில் 12 கோடியே 77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 84 ஊரகக் குடியிருப்புகளுக்கு நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீரைக்கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம்; குஜிலியம்பாறை ஒன்றியத்தில், 20 கோடியே 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 53 ஊரகக் குடியிருப்புகளுக்கு நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீரைக்கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம்; ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில், 17 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 63 ஊரகக் குடியிருப்புகளுக்கு நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீரைக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம்;

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியங்களில் 85 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 318 ஊரக குடியிருப்புகள் மற்றும் 5 பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் 41 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் – பல்லாவரம் கூட்டுக்குடிநீர் திட்ட புனரமைப்பு பணிகள்; திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கல்லக்குடி, புள்ளம்பாடி பேரூராட்சிகள் மற்றும் 6 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்ட புனரமைப்பு பணிகள்;

என மொத்தம் 197 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடுகளில் குப்பைகளை சேகரிக்க 7 கோடியே 17 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 411 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி இன்று 7 ஓட்டுநர்களுக்கு அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் டாக்டர் டி. பிரபுசங்கர், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பொறியியல் இயக்குநர் திரு.ஆர். சிவசண்முகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 10.3.2019**